செய்தவெளியீடுஎண்-15 நாள் :10.07.2020

தேனி மாவட்டம்

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள்

நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகள் (Containment Zones) - 10.07.2020

தேனி மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளாக நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள், அதன் குக்கிராமங்கள் கொரோனா தொற்று தொகுப்பாக கண்டறியப்பட்டுள்ள கீழ்க்கண்டுள்ள பகுதிகளை நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்துள்ளார்.

நகராட்சி பகுதிகளான போடிநாயக்கனுாரில் 8 வார்டுகள், தேனி-அல்லிநகரத்தில் 13 வார்டுகள், சின்னமனுாரில் 14 வார்டுகள், கம்பத்தில் 26 வார்டுகள், கூடலுாரில் 3 வார்டுகள், பெரியகுளத்தில் 8 வார்டுகள் என மொத்தம் 72 வார்டுகள் நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி பகுதிகளான ஆண்டிபட்டியில் 5 வார்டுகள், க.புதுப்பட்டியில் 2 வார்டுகள், அனுமந்தன்பட்டியில் 1 வார்டு, வடுகபட்டியில் 2 வார்டுகள், பழனிசெட்டிபட்டியில் 4 வார்டுகள், உத்தமபாளையத்தில் 6 வார்டுகள் என மொத்தம் 20 வார்டுகள் நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி ஒன்றியத்தில் அம்மச்சியாபுரம், கொத்தபட்டி, திருமலாபுரம் ஊராட்சியில் மருத்துவக்கல்லுாரி பகுதிகள், ராஜதானி ஊராட்சியில் கீழமஞ்சிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், போடிநாயக்கனுார் ஒன்றியத்தில் கோடாங்கிபட்டி. மயிலாடும்பாறை ஒன்றியத்தில் மேகமலை ஊராட்சியின் பொம்மராஜபுரம், வருஷநாடு, தேக்கம்பட்டி ஊராட்சியின் டி.மீனாட்சிபுரம். பெரியகுளம் ஒன்றியத்தில் எ.புதுப்பட்டி, எண்டபுலி, குள்ளப்புரம், முதலக்கம்பட்டி ஊராட்சியின் வரதராஜநகர், ஜெயமங்கலம், கீழவடகரை ஊராட்சியின் அழகர்சாமிபுரம், பெருமாள்புரம். மேல்மங்கலம், சில்வார்பட்டி, வடபுதுப்பட்டி, ஏ.ஆர் போலிஸ் குடியிருப்பு, மதுராபுரி, தேனி ஒன்றியத்தில் அரண்மனைப்புதுார், தர்மாபுரி, ஊஞ்சாம்பட்டி ஊராட்சியின் அன்னஞ்சி, உத்தமபாளையம் ஒன்றியத்தில் ராயப்பன்பட்டி ஆகிய குக்கிராமங்கள் நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களான பால், மருந்து பொருட்கள் தொடர்பான கடைகள் மற்றும் மருத்துவமனைகள் செயல்படும். வெளியிலிருந்து எவரும் அறிவிக்கப்பட்டுள்ள நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு உள்ளே செல்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. அதேபோல் நோய்க்கட்டுப்பாட்டு பகுதிகளில் வசிப்பவர்கள் தங்களின் தொழில், வேலை ∴ அலுவலக பணி நிமிர்த்தமாக மற்றும் தவிர்க்க இயலாத அவசர காரணங்கள் தவிர எவரும் வெளியே செல்ல அனுமதி இல்லை.

எனவே அவசரம் மற்றும் அவசியமின்றி பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியில் வருவதைத் தவிர்த்து நோய்த்தடுப்பு முறைகளை மேற்கொண்டு கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**